திருந்தாலும் எங்காவது ஒன்றிரண்டு இடங்களில் அடித்திருக்கலாம். ஆனால் எல்லோரும் யானை கட்டி போர் அடித்திருக்க மாட்டார்கள். எல்லோரும் யானை கட்டி போர் அடிக்கக்கூடிய அளவுக்கு இருந்தால் அவர்கள் போர் அடித்திருக்க வேண்டியதில்லை; யானையை வைத்தே பிழைத்திருக்கலாம். நாட்டின் வளத்தைப்பற்றிக் குறிப்பிடுகையில் உயர்வு நவிர்ச்சி அணியாக அப்படிக் கூறியிருக்கிறார்கள். நாம் முன்பிருந்த வேளாண்மை முறைகள், வளர்ச்சிகள் பற்றிய தன்மைகளை அறிந்துகொள்வதற்காக கருத்தரங்கில் தெரிவித்த பரிந்துரைகளுக்கு ஏற்ப இந்தப் பணியை மேற்கொண்டிருக்கிறோம்.

Family Planning Programme in Madras City

* 91 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) the number of persons who underwent surgical sterilisation during the 3rd week of December 1974 under the special Family Planning drive in Madras City; and

(*b*) the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) 1—12—1974-லிருந்து 21—12—1974 வரை மூன்று வார காலத்திற்கு மும்முர குடும்ப நலத் திட்ட இயக்கம் ஒன்றை சென்னை மாநகராட்சி நடத்தியது. இந்தக் கால அளவில் 2,000 பேருக்கு அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்ற திட்ட இலக்குக்குப் பதிலாக 2,006 பேர் கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொண்டனர். கருத்தடை அறுவை செய்து கொண்டவர்கள் அவர்களது வசதிக்குட்பட்டு, அவர்கள் ஓய்வு எடுத்துக் கொள்வதற்கும் உடலைத் தேற்றிக் கொள்வதற்கும் பிற்காப்பு இல்லத்தில் மூன்று நாட்கள் தங்க அனுமதிக்கப்பட்டனர். இந்த நாட்களில் அவர்களுக்கு இலவசமாக உணவு அளிக்கப்பட்டது. இதைத்தவிர, அறுவை செய்து கொண்டவர் ஒவ்வொருவருக்கும், வழக்கமாக வழங்கப்படும் ஈட்டுப்படி ரூ. 60 உடன் 2 படி அரிசியும் கொடுக்கப்பட்டது.

திரு. என். கே. பழனிசாமி : சார், இந்தத் திட்டத்தில் ஏற்படும் செலவுக்கு மத்திய சர்க்கார் எவ்வளவு கொடுக்கிறது, மாநில சர்க்கார் எவ்வளவு கொடுக்கிறது; கார்ப்பரேஷன் எவ்வளவு கொடுக்கிறது? இவ்வளவு செலவு செய்தும் குறைந்த அளவில்தான

1975 அக்டோபர் 28]

குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்ள வந்திருக்கிறார்கள். காரணம், அறுவை சிகிச்சையில் மக்களுக்குப் பிடிப்பு இல்லாமல் இருக்கிறது. ஆகவே, இதை மாற்றி, அதற்குப் பதிலாக 'கான்ட்ராசெப்டிவ் பில்ஸ்' கொடுக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சென்னை மாநகரில் நடைபெற்ற இந்த அறுவை சிகிச்சை முகாமைப் பற்றி எல்லோரும் பாராட்டியிருக்கிறார்கள். அதிலே எந்தவிதக் குறைபாடு இருப்பதாகவும் மக்கள் குறிப்பிட இடமில்லை. எங்காவது ஒன்றிரண்டு தவறுகள் நடக்குமானால்—10,000 பேர்களுக்கு அறுவை சிகிச்சை செய்வதில் ஒன்றிரண்டு தவறுகள் நடக்குமானால் அதற்கான காரணம் என்ன என்பது பற்றி ஆராயப்படுகிறது. இது மக்களுக்கு நன்மை பயக்கும் ஒரு திட்டம்.

இந்த அறுவை சிகிச்சை நடத்தும்போது ஒரு ஆணுக்கு மத்திய அரசு எல்லா வகையிலும் சேர்த்து அளிக்கும் உதவிப் பணம் 35 ரூபாய். நாம் அதை 80 ரூபாயாக, அவர்கள் கொடுப்பதோடு மாநில அரசு நிதியிலிருந்து 45 ரூபாய் கூடுதலாகச் சேர்த்துக் கொடுக்கிறோம். அதைப்போல தாய்மார்களுக்கு 'டியூபக்டமி' அறுவை சிகிச்சை நடத்தும்போது மத்திய அரசு கொடுக்கும் உதவித் தொகை ஒருவருக்கு 70 ரூபாய்தான். அந்த 70 ரூபாயுடன் மாநில அரசு நிதியிலிருந்து 40 ரூபாய் கூடுதலாகச் சேர்த்து, 110 ரூபாயாக நாம் கொடுக்கிறோம்.

சென்னை மாநகரில் நடைபெற்ற அறுவை சிகிச்சைக்கு ரோட்டரி கிளப், கில்டு ஆஃப் சர்வீஸ் மூலம் உதவி பெற்றிருக்கிறார்கள். இந்த இயக்கத்தை நடத்த ரோட்டரி சங்கம் 65,000 ரூபாய் நன்கொடையாக வழங்கியிருக்கிறது. அதைக்கொண்டுதான் மாநகராட்சி இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்தியது.

* 92 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சியால் அண்மையில் நடத்தப்பெற்ற குடும்பக் கட்டுப்பாடு முகாமில் அறுவை சிகிச்சை செய்து கொண்டவர் மொத்தம் எத்தனை பேர் ?

(இ) இதில் முஸ்லீம்கள், கிருத்தவர்கள், முறையே எத்தனை பேர் ?